


சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி பாக நிலை முகவர்கள் (BLA 2) ஆலோசனை கூட்டம், மாவட்ட அவைத் தலைவர் கோ ஏகப்பன் தலைமையில், நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனை வழங்கினார். இதில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., பகுதி கழக செயலாளர்கள், தொகுதி பார்வையாளர் என். கிருஷ்ணமூர்த்தி,பகுதி செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, கழக நிர்வாகிகள் BLA2 ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும்

# அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

சென்னை, நவ.18-

சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தின் இறுதி கட்ட பணிகள் குறித்தும், அம்பத்தூர், பானு நகரில் மேம்படுத்தப்பட்டு வரும் விளையாட்டு மைதானத்தின் முன்னேற்றப் பணிகள் குறித்தும் மற்றும் சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் பெரம்பூர் முரசொலி மாறன் பூங்கா ஆகிய பணிகளின் முன்னேற்றம் குறித்தும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (17.11.2025) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் நிலுவையில் இருந்த கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு, இன்று சர்வ தேச தரத்தில் அனைவரும் பாரட்டும் வகையில், மிகப் பெரிய பயணவியலின் பொக்கிஷமாக திகழ்கிறது.

அதைத் தொடர்ந்து, கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, நின்றிருந்த குத்தம்பாக்கம் பேருந்து நிலையப் பணிகள், முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி முழுமையாக முன்னேற்றம் அடைந்து, சிறப்பு வாய்ந்த பேருந்து நிலையமாக உருவெடுத்து வருகிறது. இந்த ஆண்டு 2026 தை மாதத்துக்குள் குத்தம்பாக்கம் பேருந்து நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

நமது கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில், திரு. வி.க. நகரில் ஒரு பேருந்து நிலையமும், பெரியார் நகரில் இன்னொரு பேருந்து நிலையமும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, மகாபலிபுரத்தில் பிரம்மா ண்டமான பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. செங்கல்பட்டிலும் அதே போல் ஒரு மிகப்பெரிய பேருந்து நிலையம் உருவாக்கப்பட்டு வருகிறது. ஆவடியில் ரூ.32 கோடி செலவில் நவீன பேருந்து நிலையம் உருவாக்கப்படுகிறது.

**சென்னை நகரத்தில் 11 பேருந்து நிலையங்கள்!**

ஆலந்தூர் தொகுதியில், அந்த மாவட்டத்தின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் பரிந்துரையின் அடிப்படையில் மேலும் ஒரு பிரம்மாண்ட பேருந்து நிலையம் அமைக்கப்படுகிறது.

இவ்வாறு, சென்னை நகரத்தில் மட்டும் 11 பேருந்து நிலையங்கள் சுமார் ரூ.200 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகின்றன. அதில் ஒரு பகுதியாக, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த காலத்தில் 1967ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த பேருந்து நிலையம் — கிட்டத்தட்ட 58 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழக முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் முழுமையாக புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

பயணிகளுக்கான வசதிகளை கருத்தில் கொண்டு, 11 கடைகள், தாய்மார்கள் பாலூட்டும் அறை, கழிப்பறை வசதிகள், உணவருந்தும் கூடம், போக்குவரத்து தொழிலாளர் ஓய்வறைகள் ஆகிய அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு நாளுக்கு 140 பேருந்துகள், சுமார் 1400க்கும் மேற்பட்ட நடைவைகள் இந்த பேருந்து நிலையத்தை வந்துச் செல்ல உள்ளன. ஆகையால், இந்த அம்பத்தூர் பேருந்து நிலையத்தை இந்த மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கெல்லாம் மக்களுக்கு தேவைகள் உள்ளனவோ, எங்கெல்லாம் வாய்ப்புகள் ஏற்படுகின்றனவோ, அங்கெல்லாம் நவீனப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு முதல்வர் முழு ஈடுபாட்டுடன் நம்மை வழிநடத்தி வருகிறார். 58 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த பேருந்து நிலையம் புதுப்பிக்கப்பட்டிருப்பது இதற்கே ஒரு வரலாற்றுச் சான்றாகும். மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் அரசு — இந்த திராவிட மாடல் அரசு — என்பதை இந்நேரத்தில் சிறப்பித்து கூறுகின்றேன்.

இந்த பேருந்து நிலையம் மேலும் சிறப்படைய, அரசு மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் முழுமையாக தொடர்ந்து ஒத்துழைப்பார்கள் என்பதை நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மேயர் திருமதி. ஆர்.பிரியா, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகன் கவி, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு.இந்துமதி, சி.எம்.டி.ஏ. தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, மண்டலக் குழுத்தலைவர்கள் பி.கே.மூர்த்தி, திருமதி. சரிதா மகேஷ்குமார், நிலைக் குழுத்தலைவர் (சுகாதாரம்) டாக்டர் சாந்தகுமாரி, எம்டிசி பொது மேலாளர் (இயக்கம்) நெடுஞ்செழியன், கண்காணிப்புப் பொறியாளர்கள் பாலமுருகன், ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர்கள் கமல், டிஎஸ்பி. ராஜகோபால், திருமதி.நாகவள்ளி பிரபாகரன், டாக்டர் பூர்ணிமா, திருமதி.பொற்கொடி, திருமதி.புனிதவதி எத்திராஜன், உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.




செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 லில் டி.ஆர். பாலு எம்.பி. அவர்களின் 2025–26 ஆவது மேம்பாட்டு நிதி தொகுதி மேம்பாட்டு நிதியில் மசூதி காலனி 4,வது தெரு சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள உயர் மின் கோபுர விளக்கு திறப்பு விழா நடைபெற்றது இன்நிகழ்ச்சியில் மக்கள் பயன்பாட்டிற்கு தாம்பரம் மாநகர செயலாளர் எஸ் ஆர் ராஜா எம்.எல்.ஏ துவக்கி வைத்தார் .

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 271 வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,நவ.18-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 271 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு இன்று (17.11.2025), வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 98, ரங்கையா தெரு, சோமசுந்தரம் ஆறாவது தெரு சந்திப்பு. 2) வட்டம் 98 அ, மேட்டு தெரு சாய்பாபா கோயில் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.




இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, வே. வாசு, கூ.பீ.ஜெயின், லதா வாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வில்லிவாக்கம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, சீ.விக்னேஷ், ச.மனோ கரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயான், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ)உமாசங்கர், சொ.முரு கேசன், ப.லோகு பாபு, கே.எஸ்.பாபு. இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே. ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டிலிருந்து சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு உதவ

# 24 மணி நேரமும் இயங்கும் தகவல் மையங்கள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்பு

சென்னை, நவ. 18-

சபரிமலை ஐயப்பன் திருக்கோயிலில் மண்டல பூஜை 17.11.2025 முதல் 27.12.2025 வரையும், மகர விளக்கு ஜோதி திருவிழா 30.12.2025 முதல் 19.01.2026 வரையும் நடைபெறுவதை முன்னிட்டு சபரிமலை பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாடு ஐயப்ப பக்தர்களுக்கு உதவுவதற்காக இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்திலும், மாநில எல்லையான களியக்காவிளையிலும், கேரள மாநிலம் சபரிமலையிலும் 24 மணி நேரமும் இயங்கும் தகவல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகவல் மையங்கள் 20.01.2026 வரை செயல்படும்.

சென்னை ஆணையர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தகவல் மையத்தினை 1800 425 1757 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும், களியக்காவிளை தகவல் மையத்தினை 94880 73779, 94862 70443, 94428 72911 ஆகிய எண்களிலும், சபரிமலையில் அமைக்கப்பட்டுள்ள தகவல் மையத்தினை கீழ்க் காணும் அலுவலர்களின் கைபேசி எண்களிலும் தொடர்பு கொண்டு தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

17.11.2025 முதல் 02.12.2025 வரை - வி. சிவக்குமார் - 94439 94342, ஆர். பிரேம்குமார் - 63858 06900, சி. சந்தீப்குமார் - 85310 70571.

03.12.2025 முதல் 17.12.2025 வரை எம். சேர்மராஜா - 83440 21828, எல். லால்கிருஷ்ணன் - 70949 06442, எஸ். சதீஷ்குமார் - 75588 39969.

18.12.2025 முதல் 02.01.2026 வரை எம். சுந்தர் - 89219 37043, ஆர். சிவசங்கர் - 90806 50431, கே. சஜ்ஜீவன் - 99405 76898.

03.01.2026 முதல் 20.01.2026 வரை எச். வெங்கடேஷ் - 98433 70229, சுதாகர் - 99425 05466, வி. ரமேஷ் - 84384 44770.

இத்தகவல் மையங்களின் சேவையினை தமிழ்நாட்டிலிருந்து சபரிமலைக்கு செல்லும் ஐயப்ப பக்தர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

### பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் கிண்டி சுற்றுச்சூழல் பூங்காவில்

# தோட்டக்கலை நாற்றங்கால் மற்றும் தன்ஹோடா விற்பனை நிலையம்

சென்னை: நவ. 18 -

கிண்டி சுற்றுச்சூழல் பூங்காவில் உள்ள தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையினால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட தோட்டக்கலை நாற்றங்கால் மற்றும் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் விற்பனை நிலையமானது சுற்றுச்சூழல் மற்றும் தோட்டக்கலை ஆர்வலர்களின் வார இறுதியை இயற்கையுடன் செலவிடும் விருப்பமான இடமாக வேகமாக வளர்ந்து வருகிறது.

கிண்டியில் அமையவுள்ள சுற்றுச்சூழல் பூங்காவிற்குள் அமைந்துள்ள இந்த நாற்றங்கால், பல்வேறு வகையான அலங்கார தாவரங்கள், பழ மரக் கன்றுகள், மருத்துவ செடிகள், உட்புற தாவரங்கள், பூர்வீக மர வகைகள் மற்றும் துறையால் தயாரிக்கப் படும் உயர்தர நடவுச் செடிகளை காட்சிப்படுத்தும் கூடமாக விளங்குகிறது. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை நிர்வகிக்கும் விற்பனை நிலையம், மலிவு விலையில் உயிர் உரங்கள், உயிரி கட்டுப்பாட்டு பொருட்கள், மண் கலவைகள், விதைகள் மற்றும் தோட்டக்கலை கருவிகள் போன்ற தோட்டக்கலை சார்ந்த உள்ளீடுகளையும் விற்பனைக்கு வழங்குகிறது.




தோட்டக்கலை அதிகாரிகள் கூறுகையில் இந்த முயற்சி மக்களின் வாழ்க்கையினை பசுமையுடன் செலவிட ஊக்குவிக்கவும், நகர்ப்புறங்களில் தோட்டக்கலையை ஊக்குவிக்கவும் மற்றும் பொதுமக்களுக்கு தரமான நடவுச்செடிகள் வழங்குவதை உறுதி செய்யவதையும் நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற ஊழியர்களிடமிருந்து தோட்டக்கலை, தாவர பராமரிப்பு மற்றும் வீட்டுத் தோட்டம் குறித்த அடிப்படை வழிகாட்டுதல்களை பார்வையாளர்கள் பெற்று பயன்பெறும் திடலாகவும் இந்த நாற்றங்கால் செயல்படுகிறது என தெரிவித்தனர்.

சுற்றுச்சூழல் பூங்கா அமையவுள்ள இடத்திற்கு அருகில் வருகை தரும் பொதுமக்கள், நாற்றங்கால் பண்ணைக்கு வருகை தந்து, நேர்த்தியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தாவர வகைகள் பார்வையிட்டு பயன்பெற்று வருகின்றனர். பருவகால பூக்கும் தாவரங்கள், மொட்டை மாடித் தோட்டங்களுக்கான மரக் கன்றுகள் மற்றும் அலங்கார செடிகள் மக்களிடையே பிரபலமடைந்து வருவதால், விற்பனை நிலையத்திற்கு வருகை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

பொதுமக்களின் ஈடுபாட்டை மேலும் அதிகரிக்க, நேரடி செயல் விளக்கங்கள் மற்றும் தோட்டக்கலை விழிப்புணர்வு திட்டங்கள் உள்ளிட்ட சிறப்பு விளம்பர நடவடிக்கைகளையும் தொடங்கிட தோட்டக்கலை துறை திட்ட மிட்டுள்ளது.

சென்னையில் பசுமைப் பரப்பை அதிகரிப்பது, நகர்ப்புற தோட்டக்கலையை ஊக்குவித்தல் மற்றும் தன்னிறைவான சுற்றுச்சூழல் பொழுதுபோக்கு இடங்களை உருவாக்குதல் ஆகிய அரசாங்கத்தின் உயரிய இயற்க்கை சார்ந்த நோக்கங்களை உறுதி செய்யும் விதமாக இந்த விற்பனை நிலையம் அமைந்துள்ளது என துறை அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

சுற்றுச்சூழல் பூங்கா தோட்டக்கலை நாற்றங்காலை பார்வையிடவும், பல்வேறு தாவர வகைகளை குறைந்த விலையில் பெற்று பயன்பெறவும் தோட்டக்கலைத் துறை பொதுமக்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறது. மேலும் விவரங்களுக்கு +91 98400 72385 மற்றும் +91 99402 45997 ஆகிய எண்களை தொடர்புக்கொள்ளவும்.

மேலும் தோட்டக்கலை நாற்றங்கால், விற்பனை மையம் மற்றும் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கும் பணிகளை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குனர் . பெ. குமரவேல் பாண்டியன் 15.11.2025 அன்று ஆய்வு செய்து அவற்றை மேம்படுத்திட உரிய அறிவுரைகள் வழங்கினார். ஆய்வின் போது தோட்டக்கலை துணை இயக்குனர், சென்னை செ. பாலசுப்பிரமணியம் மற்றும் இதர துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# சென்னை தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வே.ஆனந்தம் அவர்கள், வேளச்சேரி மேற்கு பகுதிக் கழகச் செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **கே.நீலகண்டன்** (10/488, பட்டினத்தார் சாலை, முகப்பேர் கிழக்கு, சென்னை-600 037) அவர்கள் சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளராகவும்;

மாவட்ட துணை அமைப்பாளர்களாக ஏ.கே.அருணகிரி (5, சி.ஐஸ்வர்யா அப்பார்ட்மெண்ட்ஸ், ராம்நகர் வடக்கு, வேளச்சேரி, சென்னை-600042), ஆர்.சி.குப்பன் (3/201, பஜனை கோவில் தெரு, கொட்டிவாக்கம் குப்பம், சென்னை-600041) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17-11-2025.

**தயாநிதி மாறன், எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி